செ.வெ.எண்: 30 நாள்:25.07.2020 2020

**கிருஷ்ணகிரி நகராட்சி ஆர்.எஸ். லட்சுமி புரம் , பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட பி.கொத்தூர், பர்கூர் துரைஸ் நகர், சிகரலப்பள்ளி ஊராட்சி சக்கில்நத்தம் கிராமம் மற்றும் மத்தூரில் கொரோனா தடுப்பு பணிகளையொட்டி வீடு வீடாக கிருமி நாசினி தெளிக்கும் பணிகள், காய்ச்சல் கண்டறியும் மருத்துவ முகாம், மற்றும் கபசுர குடிநீர் வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் இன்று(25.07.2020 ) நேரில் ஆய்வு செய்தார்.**

**கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளையொட்டி, தங்களின் வீடுகளுக்கு நேரடியாக வரும் மருத்துவ குழுவினரிடம் காய்ச்சல் மற்றும் சளி குறித்து விவரங்களை தெரிவிக்க ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வேண்டுகோள்.**

கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்ப்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் நகராட்சி மூலம் 6 குழுக்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 4 வார்டுகள் வீதம் கிருமி நாசினி மருந்து தெளித்தல், தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல், காலை, மாலை தலைமை மருத்துவமனைகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி நகராட்சி பகுதிக்குட்பட்ட ஆர்.எஸ்.லட்மிபுரம் பகுதியில் கொரோனா தொற்று காரணமாக தடைசெய்யப்பட்ட பகுதியில் வீடு விடாக நகராட்சி பணியாளர்கள் மூலம் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருவதையும், தங்கள் பகுதிக்கு புதியதாக வரும் நபர்களை கண்காணித்து 14. நாட்கள் தனிமைப்படுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ குழுக்களிடம் தெரிவித்தார். மேலும் அவர்களுக்கு சளி மாதிரி எடுக்க வேண்டும். மருத்துவ முகாம் நடத்தப்படும் இடங்களில் முன்கூட்டியே விளம்பர படுத்தி மக்களுக்கு தெரியபடுத்த வேண்டும்.

இப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தை முற்றிலும் தடைசெய்ய வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதிகளில் கடைகள் இயங்க அனுமதிக்க கூடாது. மேலும் தனிமை படுத்தப்பட்ட நபர்களுக்கு அவ்வப்போது தேவையான மருந்துகள் மற்றும் கபசுர குடிநீர், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரவேண்டும். தனிமைபடுத்தப்பட்ட நபர்கள் வெளியே நடமாட கூடாது. மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வலியுத்தினார்.

தொடர்ந்து பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட பி.கொத்தூர் பகுதியில் பொதுமக்களுக்கு பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கும் பணிகளையும், கிருமிநாசினி தெளிக்கும் பணிகளையும் பார்வையிட்டார். தொடர்ந்து இப்பகுதியில் தொற்று உள்ளவர்களுடன் தொடர்பில் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பர்கூர் பேரூராட்சிக்குட்பட்ட துரைஸ் நகர் பகுதியில் நடைபெற்ற மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு இப்பகுதியில் உள்ள அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு தேவையான மருந்து மாத்திரைகளை வழங்க வேண்டும் என மருத்துவ குழுவினரிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து சிகரலப்பள்ளி ஊராட்சி சக்கில் நத்தம் மற்றும் மத்தூரில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருதை நேரில் பார்வையிட்டு கிராம மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் மேற்கொண்டு அனைவருக்கும் கபசுரகுடிநீர், சத்துமாத்திரைகளை வழங்க வேண்டும். தேவையான அளவு கிருமிநாசினிகள் தெளிக்க வேண்டும் என உள்ளாட்சி அமைப்பினரிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கற்பகம், துணை இயக்குநர் ( குடும்ப நலம்) டாக்டர்.ராஜலட்சுமி, பர்கூர் துணை காவல் கண்காணிப்பாளர் திரு. ப.மு.தங்கவேல், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் திருமதி.சந்திரா, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் திரு.தண்டபாணி, பர்கூர் வட்டாட்சியர் திருமதி.சித்ரா, பர்கூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.முருகன், திரு.ஞானசேகரன், பர்கூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. சேம் கிங்ஸ்டன், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். இனியாழ் மண்டோதரி துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**